அக்டோபர் 25 நியூசிலாந்து அசெம்பிளிஸ் ஆஃப் காட் சபைகள்.

ASSEMBLIES OF GOD
CHURCHES IN NEW ZEALAND INC

# என்னை அனுப்பும்

## ஜெபக் கையேடு




21 நாட்கள் ஜெபத்திற்கான அழைப்பை ஏற்றுக்கொண்டதற்காக உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த ஆண்டைப்போல, நமது ஜெபமும், இந்த சிறு புத்தகத்தில் உள்ளவற்றை நடைமுறைப்படுத்துதலும், இந்த ஆண்டு நடைபெற இருக்கும் AGNZ தேசிய மாநாட்டுக்கான அடித்தளம் அமைக்க உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.
தேவனோடு இருக்கும் உறவையும் நாம் ஒருவருக்கொருவர் இருக்கிற உறவையும் நமது விசுவாசத்தையும் வலுப்படுத்துகிற ஆழப்படுத்துகிற நேரமாக இந்த மாநாடு அமையும் என்று நாங்கள் நம்புகிறோம். அது முடிந்ததும், 'எனவே புறப்பட்டு செல்வோம்' என்று சொல்ல நாம் உருவாக்கப்படுவோம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.


இந்த வருட மாநாட்டின் தலைப்பு **'என்னை அனுப்பும்'** என்பது உயரமும் உன்னதமுமான சிம்மாசனத்தில் தேவன் அமர்ந்திருப்பதை தரிசனத்தில் கண்ட ஏசாயா தீர்க்கதரிசி சொல்கிற வார்த்தை. வார்த்தையால் அந்த அனுபவத்தை விவரிப்பது கடினமான காரியம், ஆனாலும் மகிமையிலிருந்து மகிமைக்கு நேராக நாம் மாறுகிற போது அவரை தரிசிக்கக்கூடிய அந்த கிருபையின் தருணத்தை நாம் ஒவ்வொருவரும் கண்டடைவோம்.

இயேசு சகலத்திற்கும் பாத்திரர் என்பதை தொடர்ந்து ஆழப்படுத்தும் வண்ணமாக எல்லாம் அமையும் என்று ஒரு குழுவாக எதிர்பார்க்கிறோம். அவருடைய அன்பு, கிருபை, வல்லமை மற்றும் பரிசுத்த ஆவியின் கிரியை ஆகியவற்றின் மூலம், நாம் கர்த்தரை இன்னும் அதிகமாக அறிந்துகொள்வோம் என்று நம்புகிறோம். அவர் நம்மை தனிப்பட்ட முறையிலும், திருச்சபையாகவும், ஒரு இயக்கமாகவும், அவருடைய அன்பு, ஜீவன் என்பவைகளின் உயிருள்ள வெளிப்பாடாக செயல்பட நம்மை உருவாக்குகிறார் என்று நாங்கள் நம்புகிறோம். இப்படி செய்வதினால் அவர் இன்னும் அதிகமாக நம்மூலம் அசைவாடவும், அன்பைக்காட்டவும், வாழவும் முடியும்.

இந்த மாநாட்டில் 'யார் நமக்காக செல்வார்கள்...?' என்று தேவன் நம் ஒவ்வொருவரோடும் பேசுகிற மெல்லிய குரலை கேட்க தயாராக இருங்கள். இது எப்படிவேண்டுமானாலும் எந்த நேரத்திலும் உங்களை நோக்கி வரலாம்.
அந்தநேரங்களில் 'இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்' என்று தொனிக்கும் புதிய சிருஷ்டியின் குரல் நம் ஒவ்வொருவருக்குள்ளும் எழும்போது ஆச்சரியப்பட வேண்டாம்.

நன்றி,
**டெர்ரி பிராட்லி**
AGNZ பொது கண்காணிப்பாளர்.






## செப்டெம்பர் 22, திங்கள்
## நாள் 1

*"உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன்தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன்தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து; ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது. அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன். அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, என்னிடத்தில் பறந்துவந்து, அதினால் என் வாயைத் தொட்டு: இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது என்றான். பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்" **ஏசாயா 6:1-8.***

### ஜெபக் குறிப்புகள் :

- பிதாவே, நாங்கள் அசுத்தமான உதடுகளைக் கொண்ட மக்கள். எங்களை மன்னியும் ஈசோப்பினால் என்னைத் தூய்மைப்படுத்தும், நான் சுத்தமாவேன்; எங்களைக் கழுவும், நாங்கள் பனியை விட வெண்மையாவோம். தேவனே, என்னில் ஒரு சுத்த இருதயத்தை உருவாக்கி, நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் (சங்கீதம் 51).

- கர்த்தராகிய இயேசுவே, எங்களை பனியைப் போல வெண்மையாகக் கழுவுகிற, தேவனுடைய குடும்பத்தில் எங்களுக்கும் ஒரு இடத்தைக் தருகிற, எங்களுக்காகச் சிந்தபட்ட உமது இரத்ததிற்காக நாங்கள் உமக்கு நன்றி சொல்கிறோம். உமது இரத்தம் எங்கள் குடும்பங்களிலும், எங்கள் சபைகளிலும், எங்கள் தேசத்திலும் நன்மையானவைகளைப் பேசுவதற்காக நாங்கள் உமக்கு நன்றி சொல்கிறோம்.

- யோவான் 15ன் படி என் வாழ்க்கையில் சேராததை வெட்டி எறிந்தருளும், என் இருதயத்திலும் எங்கள் சபைகளிலும் கனியற்றதை வெட்டி எறிந்தருளும். உமது தயவால், உமது மேலாண திட்டத்தின்படி உலகம் முழுவதும் செல்ல எங்களுக்கு வெளிப்பாடு, ஞானம், ஒரே எண்ணம் கொண்ட நண்பர்கள் மற்றும் எங்கள் மத்தியில் ஒருங்கிணைப்பை தந்தருளும்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: உங்கள் பட்டிணம்/நகரத்தில் உள்ள தாய்மார்களுக்காக, தந்தைகளுக்காக மற்றும் குடும்பங்களுக்காக ஜெபியுங்கள். அனைத்து எம்.பி.க்களையும், நமது நாடாளுமன்ற அமைப்பில் பணியாற்றுபவர்களையும் கர்த்தருக்கு முன்பாக உயர்த்தி ஜெபியுங்கள். ஜூலியன் மற்றும் மோனிகா ஹாக்கன் (சீனா, நியூசிலாந்தை தளமாகக் கொண்ட) ராபர்ட் மற்றும் மார்கரெட் ஹன்ட் (பிலிப்பைன்ஸ், நியூசிலாந்தை தளமாகக் கொண்ட) பால் மற்றும் ஜங்-டே லீ (துருக்கி) ஆகியோருக்காக ஜெபியுங்கள்.




## செப்டெம்பர் 23, செவ்வாய்
## நாள் 2

"ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே" **ரோமர் *10:13-15.***

**ஜெபக் குறிப்புகள்:**

- பரிசுத்த ஆவியானவரே, நீர் என்னை நம்பி, இதுவரை கேட்டிராத சிறந்த செய்தியை என் சமூகத்திற்கு அறிவிக்க என்னை அனுப்பியதற்காக உம்மைப் துதிக்கிறேன். இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய நற்செய்தியின் மேல் நான் வைத்திருக்கிற என் நம்பிக்கையை நான் அறிவிக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் 'விசுவாசிக்கிற அனைவருக்கும் இரட்சிப்பைக் கொண்டுவரும் தேவ வல்லமை' என்ற எனது நம்பிக்கையை நான் உறுதிப்படுத்துகிறேன். (ரோமர் 1:16)

- பரலோக பிதா நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளிஸ் ஆஃப் காட் சபைகளைத் தமக்காக தெரிந்துக் கொண்டார், நாங்கள் கூட்டாண்மைகளை உருவாக்கி, விசுவாச சாகசங்களை ஒன்றாக மேற்கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம். நாங்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்கள், ஒவ்வொரு மொழி மற்றும் ஒவ்வொரு கோத்திர மக்களுக்காக இணைந்துசெயலாற்ற அனுப்பப்படுகிறோம் என்று நாங்கள் அறிக்கை இடுகிறோம்.

- நற்செய்தியைப் பகிர்ந்து கொள்வதன் மூலம், 2033 ஆம் ஆண்டுக்குள் நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளிஸ் ஆஃப் காட் சபைகளின் செல்வாக்கும் தடமும் இரட்டிப்பாகும் என்று நாங்கள் அறிக்கை செய்கிறோம். எங்கள் இயக்கம் எங்கள் தேசத்திற்கும் பிற இயக்கங்களுக்கும் ஆசீர்வாதத்தின் ஊற்றாக இருக்கும்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: உங்கள் பட்டணம் /நகரத்தில் உள்ள வணிக சமூகத்திற்காக ஜெபியுங்கள். NZ ஊடகங்கள், ஒளிபரப்பாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களை ஆண்டவருடைய சமூகத்தில் உயர்த்தி ஜெபியுங்கள். ஏவி மற்றும் ராபின் மானி (துருக்கி) M மற்றும் D M (ஆசியா/துருக்கி) கெவின் மற்றும் டெனிஸ் ரீட் (நியூசிலாந்தை தளமாகக் கொண்ட) ஆகியோருக்காக ஜெபியுங்கள்.

## செப்டெம்பர் 24, புதன்
## நாள் 3

"தேவன் எனக்கு அளித்த கிருபையினாலே உங்களுக்கு ஞாபகப்படுத்தும்படிக்கு இவைகளை நான் அதிக தைரியமாய் எழுதினேன்" **ரோமர் *15:16.***

**ஜெபக் குறிப்புகள்:**

- பிதாவே, எங்கள் சமூகங்களை நோக்கி பேசுவதற்கு எங்களுக்கு ஜீவனும் வல்லமையுள்ள வார்த்தைகளை கொடுத்ததற்காக உமக்கு நன்றி, எங்கள் குரல்கள் எந்த இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தைப் பார்க்கிலும் கூர்மையுள்ளதாக மாற்றினீரே உமக்கு நன்றி.

- உம்முடைய வார்த்தைகள் எங்கள் மூலமாக ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கும் அளவுக்கு ஊடுருவி, கேட்பவர்களின் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்க நாங்கள் ஜெபிக்கிறோம்.

- வரும் ஆண்டுகளில் எங்கள் எல்லா சபைகளிலும் பூரண சுவிசேஷம் அல்லது வார்த்தைகள் செயல்கள் பிரசங்கிக்கப்படும் என்றும், இயேசு கிறிஸ்துவின் சிலுவை மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய வல்லமைவாய்ந்த வார்த்தைகளை அதிகாரத்தோடு பிரசங்கிக்கும்போது அடையாளங்களும் அற்புதங்களும் நடைபெறும் என்றும் நாங்கள் அறிக்கை செய்கிறோம்.

- பரிசுத்த ஆவியானவரே, உமக்கும் நம்பிக்கையற்ற இந்த உலகத்துக்கும் இடையே திறப்பின் வாசலில் நிற்க எங்களைத் உற்சாகப்படுத்தினீரே அதற்காக நாங்கள் உம்மைப் துதிக்கிறோம். நாங்கள் மென்மேலும் உமது ஜெப ஆலயமாய் மாற எங்களுக்குக் கற்று தந்து எங்களை வழிநடத்தும்.

- எங்கள் ஆண்டவரே, நாங்கள் எங்கள் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளும் விசுவாசிகள் அல்லாதவர்களுக்காக ஜெபிக்கும் எங்கள் திறனை விரிவுபடுத்தவும் ஆழப்படுத்தவும் நாங்கள் உம்மை நோக்கி ஜெபிக்கிறோம். நீர் எங்களை அனுப்பிய சமுதாயங்கள் என்ற தரிசு நிலங்கள் எங்கள் ஜெபங்களால் உழப்பட உதவி செய்யும்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணிகள்: உங்கள் பட்டணம்/நகரத்தில் உள்ள கலை/படைப்புத் துறையை ஆசீர்வதியுங்கள். நியூசிலாந்து குற்றவியல் நீதி அமைப்பு, காவல்துறை, வழக்கறிஞர்கள், நீதிபதிகள், சீர்திருத்த அதிகாரிகள், நன்னடத்தை சேவை மற்றும் நீதிமன்ற அதிகாரிகள் அனைவரையும் தேவனுக்கு முன்பாக உயர்த்தி அவர்களுக்காக ஜெபியுங்கள். ஜான் மற்றும் மேரி எலியட் (நியூசிலாந்தை தளமாகக் கொண்ட), ஜேசன் மற்றும் ஜூடி ஃபாசெட் (தென்னாப்பிரிக்கா), கரேன் கோவர் (யுகே, இஸ்ரேல்) ஆகியோருக்காக ஜெபியுங்கள்.






## செப்டெம்பர் 25, வியாழன்
## நாள் 4

"புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை. இப்படி எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்" **ரோமர் *15:18-19*.**

**ஜெபக் குறிப்புகள்:**

- கர்த்தராகிய இயேசுவே, "நீர் எங்களுக்குச் சொன்ன வார்த்தையினாலே நாங்கள் சுத்தமாயிருக்கிறோம்" என்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நீர் எங்களில் நிலைத்திருப்பது போல, நாங்களும் உம்மில் நிலைத்திருப்பது எங்கள் வாஞ்சை. உண்மையான திராட்சைச் செடியாகிய உம்மில் நிலைத்திருப்பதன் மூலம் கனிகொடுப்பதே எங்கள் விருப்பம். (யோவான் 15)

- பரிசுத்த ஆவியானவரே, இன்று நாங்கள் எங்களுக்கு ஒரு புதிய நிரப்புதலைக் கேட்கிறோம். நீர் எங்களை அனுப்பின உலகத்தில் இருப்பவனை விட நீர் பெரியவர் என்பதையும், எங்கள் போரின் ஆயுதங்கள் அரண்களை அழிக்க தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது என்பதையும் நீர் எங்களுக்கு மீண்டும் நிரூபியும்.

- எங்கள் குடும்பங்கள், எங்கள் சபைகள், எங்கள் இயக்கம் மற்றும் எங்கள் தேசத்திற்கு எதிராக வரும் அனைத்தின் மீதும் இயேசுவின் இரத்தத்தின் ஜீவன் அளிக்கும் வல்லமையை நாங்கள் தெளிக்கிறோம். ஆண்டவருடைய எதிரிகளால் எங்களுக்கு விரோதமாக எழுதப்பட்ட அல்லது பேசப்பட்ட எதையும் விட இயேசுவின் இரத்தம் சிறந்த வார்த்தையைப் பேசுகிறது என்று நாங்கள் அறிக்கை செய்கிறோம்.

- எங்கள் சபைகளில் உள்ள ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் குழந்தை மூலமாகவும் பரிசுத்த ஆவியின் பிரசன்னம் இன்னும் அதிகமாக வெளிப்படும் என்றும், விசுவாசத்தினாலும் கைகளை வைப்பதினாலும் வாழ்க்கையை மாற்ற பரிசுத்த ஆவி எங்கள் மூலமாக வல்லமையாகச் செயல்படுவதைக் காண்போம் என்றும் நாங்கள் அறிக்கை செய்கிறோம்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணிகள்: உங்கள் மேயரையும் கவுன்சிலையும் ஆண்டவருடைய சமூகத்தில் உயர்த்தி ஜெபியுங்கள், நியூசிலாந்து முழுவதும் உள்ள குழந்தைகளுக்கான ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்காகவும், காலின் மற்றும் ஜென்னி அய்லிங் (மொசாம்பிக், நியூசிலாந்தை தளமாகக் கொண்ட) வால் பேட்டப் (தாய்லாந்து, நியூசிலாந்தை தளமாகக் கொண்ட) மால்கம் மற்றும் லிண்டா பெய்லிஸ் (SE Asia, நியூசிலாந்தை தளமாகக் கொண்ட) ஆகியோருக்காகவும் ஜெபியுங்கள்.

## செப்டெம்பர் 26, வெள்ளி
## நாள் 5

"மேலும் அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்களென்றும், கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்துகொள்வார்களென்றும் எழுதியிருக்கிறபடியே, நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்" **ரோமர் *15:20-21.***

**ஜெபக் குறிப்புகள்:**

- பிதாவே, எங்களை அசெம்பிளிஸ் ஆஃப் காட் குடும்பமாக ஒன்றிணைத்தத்திற்காக நாங்கள் உமக்கு நன்றி சொல்கிறோம். எங்கள் மூத்த சகோதரர் இயேசுவிலும், அவர் மூலமாகவும், நாங்கள் அதே வாக்குறுதிகளையும் அதே சுதந்தரத்தையும் பகிர்ந்து கொள்கிறோம். இயேசுவின் இரத்தம் ஒவ்வொரு சுவரையும் தகர்த்து, ஒவ்வொரு தடையையும் உடைத்தற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

- பரலோகப் பிதாவே, உமது பணியை செய்ய 'அனுப்பப்படுவது' என்றால் என்ன என்பதையும், புதிய விசுவாச சமூகங்களை வளர்ப்பது எப்படி என்பதையும் உமது குமாரன் இயேசுவை அனுப்பி காட்டியதற்காக உம்மை ஸ்தோத்தரிக்கின்றோம்.

- நாங்கள் கண்டடையப்பட்டதின் மகிழ்ச்சி, எங்களை அனுப்பப்பட்டதின் மகிழ்ச்சியைத் தடுத்து நிறுத்தியதற்கு எங்களை மன்னியும்.

- மாநாட்டிலும், வரவிருக்கும் ஆண்டுகளிலும், நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளிஸ் ஆஃப் காட் இயக்கம், உம்மை இன்னும் அறியாதவர்கள் மீது நாங்கள் கொண்டுள்ள அன்பிற்காக அறியப்படும் என்று நாங்கள் அறிக்கை செய்கிறோம்.

- எங்கள் இதயங்களை மாற்றும்: நாங்கள் ஒருவருக்கொருவர் மீது வைத்திருக்கும் அன்பு மென்மேலும் பிரகாசமாகவும், அவிசுவாசிகளுக்கு தவிர்க்க முடியாத ஒன்றாக மாற வேண்டும்.

- பரிசுத்த ஆவியானவரே, எங்கள் இயக்கத்தை மனத்தாழ்மையின் கிருபை நிரப்பும்படி நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். எங்கள் வாழ்க்கையின் மேல் நீர் வைத்த ஒவ்வொரு அழைப்புக்கும், ஒவ்வொரு வரங்களுக்கும் நாங்கள் எங்கள் கதவுகளைத் திறப்போம். ஒரு புதிய சபை வளரக்கூடிய இடங்களுக்கு நாங்கள் எழுந்து அனுப்பப்படுவோம். இதனால் நியூசிலாந்து தேசத்தில் இயேசுவின் தியாகத்திற்கு தகுதியான அறுவடை உண்டாகும் என்று அறிக்கை செய்கிறோம்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள அனைத்து சபைகளையும் ஆசீர்வதித்து ஜெபிப்போம். நியூசிலாந்தில் இருக்கிற எல்லா கிறிஸ்தவ பிரிவுகளின் தலைவர்களுக்கும் ஞானத்தையும் புதிய அபிஷேகத்தையும் வழங்க ஆண்டவரை நோக்கி ஜெபிப்போம். ஹீதர் போர்ன் (பிரான்ஸ்) மேக்ஸ் மற்றும் டோரதி சிஸ்மன் (தென் கிழக்கு ஆசியா, நியூசிலாந்தை தளமாகக் கொண்ட) பெஞ்சமின் மற்றும் ஃபோப் கோன்ராடி (ஆப்பிரிக்கா) ஆகியோருக்காக ஜெபியுங்கள்.






## செப்டெம்பர் 27, சனி
## நாள் 6

"இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார், அவர் உயர்த்தப்பட்டு, மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார். மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள். அப்படியே, அவர் அநேகம் ஜாதிகளின்மேல் தெளிப்பார்; அவர் நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில், தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்துகொள்வார்கள்" **ஏசாயா *52:13-15.***

**ஜெபக் குறிப்புகள்:**

- பரலோகத் தகப்பனே, இயேசுவைப் போல எங்கள் சிலுவையைச் சுமக்க நாங்கள் விருப்பமில்லாமல் இருந்த காலங்களை மன்னித்தருளும். உம்மிடம் இரக்கத்தையும் கிருபையையும் நாங்கள் கேட்கிறோம். நாங்கள் மனந்திரும்பவும், செல்லுஞ்செலவைக் கணக்கு பார்க்கவும், புத்திசாலித்தனமாகச் செயல்படவும், தாழ்மையின் பாதையைத் தேர்ந்தெடுத்து மீண்டும் எங்கள் சிலுவையை எடுக்கவும் உதவும் உமது கிருபையின் புதிய பார்வையை எங்களுக்குத் தாரும்.

- எங்களை அனுப்பிய சமூகத்தைப் நீர் எப்படி பார்ப்பீரோ அந்தபடி நாங்களும் அவர்களை பார்க்க எங்களுக்கு மென்மையான கண்களைத் தாரும். உம்முடைய இதயத்தை உடைக்கும் காரியங்கள் எங்கள் இதயங்களையும் உடைக்கட்டும். எங்கள் இதயங்களை மாற்றும். மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல இருப்பவர்கள் மீது எங்கள் இதயங்களில் இரக்கம் பொங்கச் செய்யும்.

- நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளிஸ் ஆஃப் காட் இயக்கம் எங்கள் தேசத்தின் சுற்றுப்புறங்கள், பட்டணங்கள் மற்றும் நகரங்களுக்கு இயேசு கிறிஸ்துவால் அனுப்பப்பட்ட ஒரு இயக்கம் என்று நாங்கள் அறிக்கை செய்கிறோம். கிறிஸ்து தருகிற விடுதலையை அறிவிக்கவும், உடைந்த இதயங்களைக் கட்டவும், நோயுற்றவர்களைக் குணப்படுத்தவும் நாங்கள் அனுப்பப்பட்டோம்.

- எங்கள் இயக்கம் முழுவதும் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்களின் அபிஷேகங்கள் எழும்பும் என்றும், ஒவ்வொரு ஆணும், பெண்ணும், குழந்தையும் அறுவடை செய்ய ஆயத்தப்படுத்தப்பட்டு அனுப்பப்படுவார்கள் என்றும் நாங்கள் விசுவாச அறிக்கை செய்கிறோம்.

- எங்கள் கண்காணிப்பாளர் பி.எஸ். டெர்ரி மற்றும் எங்கள் நிர்வாகக் குழுவிற்கு, உமது ஆலோசனையின்படி எங்கள் இயக்கத்தை வழிநடத்த அவர்களுக்கு புத்திசாலித்தனமான உத்திகள் மற்றும் தைரியம் வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: உங்கள் பட்டணம்/நகரத்தில் உள்ள பராமரிப்பாளர்கள் மற்றும் சமூக சேவையாளர்களுக்காக ஜெபியுங்கள். நியூசிலாந்தில் புதுமையாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் உருவாக ஜெபியுங்கள். சாம் மற்றும் கரோல் சூகோட்டா (இந்தோனேசியா) ராட் மற்றும் லின்லி டால்போட் (ஆப்பிரிக்கா) ஆகியோருக்காக ஜெபியுங்கள்.

## செப்டெம்பர் 28, ஞாயிறு
## நாள் 7

"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம். இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?" ***2 கொரிந்தியர் 2:14-16.***

**ஜெபக் குறிப்புகள்:**


- அழிந்து போகிற ஆத்துமாக்களை இரட்சிக்க ஓய்வில்லாமல் கிரியை செய்து கொண்டிருக்கும் தேவனே எங்கள் பரலோக தகப்பனே நாங்கள் உம்மை போற்றுகிறோம். அவர்களை தொடர்ந்து பின்தொடர்வதில் நீர் ஆர்வம் காட்டுகிறீர், அதையே முக்கியப்படுத்தி எப்போதும் செயலாற்றுகிறீர். தகப்பனே, உமது மரபணுவை உமது பிள்ளைகளாகிய நாங்கள் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம். நீர் எங்களை நம்பி ஒப்படைத்த இந்த பணிக்காக எங்களை மீண்டும் அர்ப்பணிக்கிறோம்.

- ஆண்டவரே, உம்மை அறிகிற மகிழ்ச்சியை பிறரிடம் பகிர்ந்து கொள்ளாமல், பயந்து, சுயநலமாக, வெட்கப்பட்டு இருந்ததிற்காக எங்களை மன்னியும். உம்மோடு கொண்டுள்ள உறவில் நின்று நாங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள் மற்றவர்களுக்கு பகிர்ந்து கொள்ளாமல் எங்களுக்காக மட்டும் தக்கவைத்து கொண்டதற்காக எங்களை மன்னியும். எங்களைச் சுற்றியுள்ள மக்களின் ஆவிக்குரிய தேவைகளை பாராமல் அதை அடிக்கடி புறக்கணித்தோம். எங்கள் அலட்சியத்தையும் குருட்டுத்தன்மையையும் நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

- இனிமேல், நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளிஸ் ஆஃப் காட் இயக்கம் கர்த்தருடைய அறுவடைக்குத் தயாராக அனுப்பப்பட்ட வேலையாட்களின் குழுவாக எங்களை நாங்கள் காண்போம் என்று அறிக்கை செய்கிறோம். தேசங்களை தேவனிடம் கொண்டுவருவதற்காக அவருடைய ஊழியர்களாக, தேவனால் கட்டப்பட்ட மக்களாக நாங்கள் எங்களை அடையாளம் கண்டுகொள்வோம்.

- எங்கள் இயக்கத்திற்கு அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள் ஆகிய ஊழிய வரங்களை தந்து எங்களை எழுப்பி அனுப்பியதற்காக நாங்கள் உமக்கு நன்றி சொல்கிறோம். மற்றொரு நபரின் கிருபை வரங்களை மதித்து அவர்களுக்கு வழிவகுத்து, ஒருவருக்கொருவர் பணிவோடு அன்பு செலுத்த எங்களுக்கு அளித்து உம்முடைய கிருபைக்காக உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: உங்கள் பட்டணம்/நகரத்தில் போதைக்கு அடிமையானவர்கள் மற்றும் மனசோர்வடைந்தவர்களின் இதயங்களில் நம்பிக்கை எழ ஜெபியுங்கள். நியூசிலாந்து முழுவதும் பிள்ளைகளின் இதயங்கள் தந்தையர்களிடமும், தந்தையர்களின் இதயங்கள் பிள்ளைகளிடமும் திரும்ப ஜெபியுங்கள். ஹிலாரி மற்றும் ஜாக்கி டுமுசிம் (உகாண்டா) ராபின் மற்றும் மார்கரெட் ஐம் (கென்யா) பீட்டர் மற்றும் ஹெலன் பிரவுன் (பிலிப்பைன்ஸ்) ஆகியோருக்காக ஜெபியுங்கள்.






## செப்டெம்பர் 29, திங்கள்
## நாள் 8

"ஆகையால், கர்த்தருக்கு பயப்படத்தக்கதென்று அறிந்து, மனுஷருக்குப் புத்திசொல்லுகிறோம்; தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறோம்; உங்கள் மனச்சாட்சிக்கும் வெளியரங்கமாயிருக்கிறோம் என்று நம்புகிறேன்" ***2 கொரிந்தியர் 5:11.***

**ஜெபக் குறிப்புகள்:**

- பரிசுத்த ஆவியானவரே, நீர் எங்களுக்குக் கொடுத்த பொறுப்பை நிறைவேற்ற உமது வல்லமையை எங்களுக்கு தந்ததால் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் சமூகத்தை மாற்றுவதற்காக நீர் எங்களை ஒருமனதுள்ளவர்களாய் அனுப்புவதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் சபைகள் உயிருள்ள கற்களாக ஒன்றிணைக்கப்பட்டு, உமது மகிமை தங்கும் இல்லமாக எழுப்புகிறீர் நன்றி.

- நாங்கள் ஒருவருக்கொருவர் சந்திக்கும்போது ஒவ்வொருவரிலும் உம்மை காண உம்முடைய மகத்துவத்தையும் காண எங்களுக்கு கண்களை தாரும். எங்கள் பலவீனத்தில் அவர்களுக்குள் உம்மை காணாமல் அவர்களுக்கு விரோதமாக பேசினதை எங்களுக்கு மன்னியும். ஆண்டவரே, நாங்கள் பெருமையிலிருந்து மனம்திரும்புகிறோம். மற்றவர்களை எங்களை விட சிறந்தவர்களாக காண எங்களை அர்ப்பணிக்கிறோம்.

- கிருபை மற்றும் தாழ்மையின் ஆவி ஒரு திறந்த வானத்தை எங்கள் இயக்கத்தின் மேல் கொண்டு வரட்டும். எங்கள் சபைகளிலே மக்கள் ஆத்தும அறுவடைக்காக ஒரு புதிய அபிஷேகத்தை பெற்றுகொள்வார்களாக. நீர் எங்களை அனுப்பின பணியிடங்கள், சுற்றுப்புறங்கள் மற்றும் சபைகளில் உம் சேவை செய்ய எங்களுக்கு புதிய வரங்களை தந்தருளும்.

- எங்கள் இயக்கம் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தில் வளரும். அதுவே எங்கள் அடையாளமாக குறிக்கப்படும் என்று நாங்கள் அறிக்கை செய்கிறோம். உமது பிள்ளைகளாகிய நாங்கள் 'நீர் பரிசுத்தராயிருப்பது போல பரிசுத்தராயிருப்போம்'. உமது ஆலயத்தைச் சுத்திகரித்து, உமது இரக்கத்தினால் உமது நாமத்தை அவமதிக்கும் அனைத்தையும் எங்களிடமிருந்து அகற்றும்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: கீழ் தெற்கு தீவின் மீது பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதமும் ஊற்றுதலும் உண்டாவதாக என்று விசுவாசத்தோடு அறிக்கை செய்கிறோம். அந்தப் பகுதியில் உள்ள பாஸ்டர்: பீட்டர் நெக்லென் மற்றும் அவரோடு சேர்ந்து ஊழியம் செய்கிற உடன்ஊழியர்களை பாதுகாத்து அவர்கள் மீது பரிசுத்த ஆவியின் ஊற்றுதலை அளிக்க வேண்டும் என்று ஆண்டவரிடம் மன்றாடுங்கள். நமது சூப்பரின்டென்டெட் பி.எஸ். டெர்ரி மற்றும் ரோவேனா பிராட்லிக்கு தேவ ஆசீர்வாதம், தைரியம், விசேஷித்த ஞானம் உண்டாக மற்றும் எல்லா தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கவும். கேஃபவுண்டன் (ஆசியா பசிபிக், நியூசிலாந்தை தளமாகக் கொண்ட) ஆலன் மற்றும் எலிசபெத் ஓ'லௌலின் (யுகே) டக் மற்றும் கலிண்டா லிச்ட்வார்க் (கிழக்கு ஆசியா) எம் மற்றும் கே டி (எஸ்இ ஆசியா) ஆகியோருக்காக ஜெபிக்கவும்.

## செப்டெம்பர் 30, செவ்வாய்
## நாள் 9

*"இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்".*
***2 கொரிந்தியர் 5:18.***

**ஜெபக் குறிப்புகள்:**

- எங்கள் தேவனாகிய தகப்பனே, பல தசாப்தங்களாக எங்கள் இயக்கத்திற்கு உம்முடைய மகா பெரிய வாக்குத்தத்தங்களை தந்து எங்களோடு இதுவரைக்கும் உண்மையுள்ளவராயிருக்கிறீர். அதுமட்டுமல்லாமல், எங்களை உமக்கென்று பிரித்தெடுத்த மக்களாக வைத்திருக்கிறீர் அதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

- 2033 க்கு முன், உலகளாவிய AG இயக்கம் இருமடங்காக அதிகரிக்க, தரிசனம், வெளிப்பாடு, கிருபை மற்றும் வல்லமை எங்களுக்கு தந்ததிற்காக நாங்கள் உமக்கு நன்றி சொல்கிறோம். பரிசுத்த ஆவியானவரே, இது மனித வல்லமையாலோ அல்லது பலத்தினாலோ கூடாத காரியம், உமது வல்லமையினால் நடக்கும் என்று பயபக்தியுடன் ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் எங்கள் சொந்த பலத்தில் நம்பிக்கையாயிராமல் எப்பொழுதும் தாழ்மையோடு உமது வழிகளில் கவனம் கொண்டவர்களாய் இருக்க எங்களுக்கு அனுகிரகம் செய்யும். எங்கள் வாழ்க்கையில் இதுவரை உமது ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்காத இடங்கள் எதுவென்றும் எங்களுக்குள் ஏதேனும் தீய வழி இருந்தால் அதையும் வெளிப்படுத்த உம்மை அழைக்கிறோம். எங்களிடையே வந்து உம்மால் நாங்கள் அனுப்பப்படுவதற்கு பொருத்தமில்லாத அசுத்தங்கள் தீமைகள் எங்கள் வாழ்வில் இருக்குமானால் அதை உடைத்தெறிய பலனையும் ஆற்றலையும் எங்களுக்கு தாரும்.

- நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளிஸ் ஆஃப் காட் சபைகள் மாநாட்டிலும் அதற்கு பிறகும் கர்த்தருடைய வார்த்தைக்கும் சத்தத்திற்கும் கீழ்ப்படிகிற இயக்கமாக இருக்கும் என்பதை நாங்கள் இயேசுவின் நாமத்தில் அறிக்கை செய்கிறோம்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: தேவ ஆசீர்வாதமும் பரிசுத்த ஆவியின் ஊற்றுதலும் தென் தீவின் நடுப்பகுதியில் உண்டாகட்டும் என்று விசுவாசத்தோடு அறிக்கை இடுங்கள். பாஸ்டர் ஜொனாதன் ஹேல்ஸ் மற்றும் அந்த பகுதியில் உள்ள மற்ற போதகர்களை பாதுகாக்கவும் அபிஷேகம் செய்யவும் தேவனிடம் மன்றாடுங்கள். நமது டெப்யூட்டி சூப்பரின்டென்டெட் சமோவான் இனக்குழுவின் தலைவருமான பாஸ்டர் லாவ் மற்றும் நான்சி ஃபாலேடுடுலு ஆகியோருக்கு ஆசீர்வாதம், தைரியம், ஞானம் மற்றும் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். நமது சமோவான் சபைகள் மீதும், சமோவான் பகுதிகளில் சபைகளை நிறுவுதல் செய்யும் பணியில் இருப்பவர்கள் மீதும் இரட்டிப்பான ஆசீர்வாதம் உண்டாக ஜெபியுங்கள். ஜான் மற்றும் லிண்டா வாட்சன் (நியூசிலாந்து) டேவிட் மற்றும் புஷ்பா வாட்டர்ஸ் (SE ஆசியா) கென் மற்றும் எர்லா விர்ட்யூ (பிலிப்பைன்ஸ்) ஆகியோருக்காக ஜெபத்தை ஏறெடுப்போம்.






## அக்டோபர் 1, புதன்
## நாள் 10

"அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்" ***2* கொரிந்தியர் *5:19.***

**ஜெபக் குறிப்புகள்:**

- எங்கள் ஆவிக்குரிய பெற்றோர்களுக்கு ஆண்டவர் இயேசுவின் மீது இருந்த அன்புக்கும், பரிசுத்த ஆவியின் மற்றும் பெந்தேகோஸ்தே அனுபவத்திற்காக நிற்க அவர்களுக்குள் இருந்த வைராக்கியதிற்காகவும் நாங்கள் உம்மை ஸ்தோத்தரிக்கின்றோம்.

- பிதாவே, பெந்தகோஸ்தேவின் அக்கினியின் முன்மாரியை எங்கள் தேசத்தின் மீது ஊற்றினது போல, ஆதி அன்பின் அனலை மீண்டும் எங்கள் மத்தியில் பற்றி எரியச் செய்யும். மக்களின் கருத்துகளுக்குப் பயந்ததின் காரணமாக நாங்கள் எந்த இடங்களில் பின் அடைந்தோம் என்று எங்களுக்கு காட்டி தாரும்.

- ஆண்டவராகிய இயேசுவே, பெந்தெகொஸ்தே அக்கினி எங்கள் தேசத்தில் உள்ள ஒவ்வொரு மொழியிலும், கோத்திரத்திலும், தலைமுறையிலும் ஆண், பெண், சிறுவர், சிறுமியர் என அனைவரிடத்திலும் எரிந்து கொண்டிருப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களை நீர் தாபரிக்கும் வீடாகவும், நீர் நாங்கள் தங்கும் இல்லமாகவும் மாற்றினதற்காக உமக்கு நன்றி.

- பற்பல கலாச்சாரங்களை தொடுகிற, தலைமுறைகளையும் தாண்டி செல்கிற, ஒன்றுக்கொன்று சார்புள்ள ஆசீர்வாதமும் கிருபைகளும் எங்கள் மாநாட்டின் மீதும், வரவிருக்கும் ஆண்டுகளில் எங்கள் இயக்கத்தின் மீதும் இயேசுவின் நாமத்தில் உண்டாகட்டும் என்று விசுவாசத்தோடு நாங்கள் அறிக்கை இடுகிறோம்.

- இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆயொடெரோவா நியூசிலாந்துக்கு நம்பிக்கையின் புதிய சகாப்தத்தை நாங்கள் கட்டளையிடுகிறோம். நியூசிலாந்தர்களின் உதடுகளில் ஒரு புதிய பாடல் எழும், அது கர்த்தருடைய நன்மையிலும், இயேசு செய்த செயல்களில் மகிழ்ச்சியடையும் பாடலாக இருக்கும்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: மேல் தென் தீவில் பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தையும் ஊற்றுதலும் உண்டாக ஜெபிப்போம். பாஸ்டர் ரோஸ் பெர்குசன் மற்றும் அந்த பகுதியில் உள்ள மற்ற போதகர்களை பாதுகாக்கவும் அபிஷேகத்தால் நிரப்பவும் தேவனிடம் மன்றாடுவோம். நமது செயற்குழு உறுப்பினர் மற்றும் டே ரூபு மாவோரி தலைவர் பாஸ்டர் மினா மற்றும் டென்னிஸ் அக்ரமன் ஆகியோருக்கு ஆசீர்வாதம், தைரியம், ஞானம் மற்றும் எல்லா தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். நமது அனைத்து மாவோரி சபைகள் மீதும், மாவோரிகள் மத்தியில் சபைகள் நிறுவுதல் செய்கிற ஊழியர்கள் மீதும் இரட்டிப்பான ஆசீர்வாதம் உண்டாக ஜெபிப்போம். சாலமன் மற்றும் சோலா சந்துக்காக (நவ்ரு) ஜெபிப்போம். ஜே மற்றும் சி எம் (இந்தோனேசியா) ஹமிஷ் மற்றும் ஹைடி பெட்ஸ் (சிங்கப்பூர்) என்பவர்களுக்காக ஜெபிப்போம்.

## அக்டோபர் 2, வியாழன்
## நாள் 11

"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிப்பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" **அப்போஸ்தலர் *1:8.***


**ஜெபக் குறிப்புகள்:**

- பிதாவாகிய தேவனே, பரிசுத்த ஆவியை எங்களுக்கு அனுப்பி தந்ததிற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம், அதிசயமான ஆலோசனைக் கர்த்தா, திட்டங்களை தருபவர், பிசாசின் கிரியைகளை நிர்மூலமாக்குபவராய் எங்களோடு இருக்க அவரை தந்ததிற்காக நன்றி.

- பரிசுத்த ஆவியின் வல்லமையான மற்றும் தொடர்ச்சியான ஊற்றுதல் நியூசிலாந்து தேசத்தின் மீது உண்டாக இயேசுவின் நாமத்தில் உண்டாகட்டும் என்று விசுவாசத்தோடு அறிக்கை செய்கிறோம். புது திராட்சைரசத்துக்கு ஏற்ற புது துருத்திகளாக எங்கள் சபைகள் மாற எங்களை நீர் புதுப்பித்து உருமாற்றும்.

- புதிய சபைகள் உருவாகட்டும், புதிய விசுவாச சமூகங்கள் வளரட்டும் என்று நாங்கள் அறிக்கை செய்கிறோம். வரும் ஆண்டுகளில், சீஷர்களை உருவாக்க புதிய திராட்சரசத்தால் புது துருத்திகளை நிரப்பும். அறுவடைக்கென்று அனுப்பப்பட்ட, சகல ஜாதிகளை சீடராக்
- குகிற சீடர்களாக அவர்கள் மாறுவார்களாக.

- அடிமைத்தனங்கள், சாபங்கள், கட்டுகள், நோய்கள் மற்றும் வியாதிகள் இயேசுவின் இரத்தத்தால் உடைக்கப்படும் என்று நாங்கள் அறிக்கை செய்கிறோம். எங்கள் தேசத்தின்மீது இயேசுவின் இரத்தத்தை மன்றாடுகிறோம். இயேசுவின் நாமத்தில் எதிரிகளை கட்டுகிறோம், அரண்களை நிர்மூலமாக்கிறோம், பிசாசுகளை வெளியேற கட்டளை கொடுக்கிறோம்.
- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: தேவ ஆசீர்வாதமும், பரிசுத்த ஆவியின் ஊற்றுதலும் வெலிங்டன் பகுதியில் உண்டாகட்டும் என்று விசுவாசத்தோடு இயேசுவின் நாமத்தில் அறிக்கை செய்கிறோம். பாஸ்டர் பால் வைட் மற்றும் அந்த பகுதியில் உள்ள மற்ற போதகர்கள் பாதுகாக்கப்படவும் அபிஷேகத்தால் நிரப்பப்படவும் தேவனோடு மன்றாடுவோம். பாஸ்டர் பால் ஒயிட் நமது இயக்கத்தில் வல்லமையான தேவ ஊழியர்களை எழுப்பிக்கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட தேவ மனிதர்கள் அவர்களுடைய குடும்பங்கள், சுற்றுப்புறங்கள், சபைகள் மற்றும் பணியிடங்களில் கர்த்தருக்கென்று வல்லமையாக ஊழியம் செய்ய எழும்பும்படி ஜெபிப்போம். நமது செயற்குழு உறுப்பினர் பாஸ்டர் மைக் மற்றும் மைக்கேல் கோ ஆகியோருக்கு ஆசீர்வாதம், தைரியம், ஞானம் மற்றும் தேவைகள் சந்திக்கப்பட மன்றாடி ஜெபியுங்கள். புதிய பகுதிகளில் சபைகளை நிறுவுதல் செய்யும் ஊழியர்கள் எழும்பவும் அனுப்பப்படவும் ஜெபித்து கொள்ளுங்கள். பிலிப் மற்றும் சாரா ஹாக்கன் (கென்யா) டேவ் மற்றும் ஹெய்டி ஃப்ரேசர் (கம்போடியா) ஆகியோருக்காக ஜெபியுங்கள்.






**அக்டோபர் 3, வெள்ளி**
**நாள் 12**

"ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்" ***2 கொரிந்தியர் 5:20.***

**ஜெபக் குறிப்புகள்:**

- எங்கள் பிதாவாகிய தேவனே, நீர் எங்களுக்காக இதுவரை செய்த எல்லா செயல்களுக்கும், இனிமேல் எங்கள் குடும்பங்களில், நகரங்களில், தேசத்தில், சபைகளில் நீர் செய்வேன் என்று சொல்லி அளித்த எல்லா வாக்குதத்தங்களுக்கும் உமக்கு துதி கன மகிமை செலுத்தி உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்.

- நீர் எங்கள் இயக்கத்தோடு கூட இருந்து எங்களை ஒன்றிணைத்து ஒரு புதிய காரியத்தை எங்கள் மத்தியில் செய்ய போகிறதற்காக நாங்கள் ஆச்சரியத்தோடு நன்றி சொல்கிறோம். தகப்பனே உம் சித்தம் போல இன்னும் செயலாற்றும். நீர் துவங்கியதை பரிபூரணப்படுத்தும். எங்கள் மாநாட்டின் மீதும் அதைத்தொடர்ந்து வருகிற வருடங்களும் உமது கிருபை எங்களோடு உண்டாகட்டும். உமது நாமத்தின் நிமித்தம் ஆழமான கிரியைகளை எங்கள் மத்தியில் செய்தருளும்.

- எங்கள் தேவனே, இந்தத் தேசத்தின் மக்களுக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். சுவிசேஷத்தை கேட்டு அதை ஏற்றுக்கொண்ட தாங்கத்தா வ்ஹேனுவகே - க்காக (தேசத்தின் மக்களுக்காக), உம்முடைய வசனத்தை பிரசங்கித்து சபைகளை நிறுவுதல் செய்ய அனுப்பப்பட்ட அவர்களுக்காக நன்றி செலுத்துகிறோம். ஒரு காலத்தில் ஐவி (பழங்குடியினர்) மற்றும் ஹபு (துணை பழங்குடியினர்) மூலம் பரவிய எழுப்புதல் அக்கினிக்காக நாங்கள் நன்றி சொல்கிறோம். பரிசுத்த ஆவியானவரே, அந்தத் தணல்களின் மீது ஊதும்படி உம்மிடத்தில் மன்றாடுகிறோம். தேசத்தில் உள்ள ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் மாவொரிகளை இயேசுவிடம் வந்து அவருடைய நாமத்தில் ஜீவனைப் பெற்றுக்கொள்ள அழைக்கிறோம்.

- ஆண்டவராகிய இயேசுவே, சீடர்களை உருவாக்குவதற்கும் சபைகளை நிறுவுதல் செய்யவும் புதிய தரிசனத்தையும், புதிய திட்டங்களையும் எங்களுக்கு தருகிறதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் சபைகளில் உடைந்தவர்கள், புண்படுத்தப்பட்டவர்கள், அடிமைதனத்துக்குள் இருப்பவர்கள், வீட்டில்லாதவர்கள் வரும்போது அவர்களை நீர் பார்க்கிற வண்ணம் அவர்களை பார்க்கவும் அவர்கள்மீது மனதுருக்கமுள்ளவர்களாக இருக்கும்படி எங்களுக்கு உம் கிருபையை தரவேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். "ஆண்டவரே, சிறைப்பிடிக்கப்பட்டவர்களிடம் உம் அன்பையும், கிருபையையும் கொண்டு செல்லவும், அவர்களை விடுதலை செய்ய விசுவாசத்தின் வலிமையோடு என்னை அனுப்பும்".

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: மேற்கு கடற்கரை வட தீவின் மீது ஆசீர்வாதத்தையும் பரிசுத்த ஆவியின் ஊற்றுதலையும் கட்டளையிட்டு ஜெபிக்கிறோம். பாஸ்டர் பால் கார்னிஷ் மற்றும் அந்த பிரதேசத்தில் உள்ள மற்ற போதகர்களைப் பாதுகாத்து, அவர்கள் மீது இரட்டிப்பான அபிஷேகம் வர மன்றாடி ஜெபிக்கிறோம். பாஸ்டர் பிப் பாட்டன் நமது இயக்கத்தில் பெண்களின் எழுச்சிக்காக செயல்படுகிறார். அவரை நினைத்து ஜெபிப்போம். அவர்களின் குடும்பங்கள், சுற்றுப்புறங்கள், சபைகள் மற்றும் பணியிடங்களில் கர்த்தருக்கு ஊழியம் செய்ய ஆவிக்குரிய வல்லமையோடு பெண்கள் தேவன் எழுப்ப வேண்டும் என்று ஜெபிப்போம். நமது செயற்குழு உறுப்பினர் பாஸ்டர் சஞ்சய் மற்றும் சுனிதா கந்த்ரேகுலா ஆகியோருக்கு ஆசீர்வாதம், தைரியம், ஞானம் மற்றும் தேவைகள் சந்திக்கப்பட ஜெபத்தில் அவர்களுக்காக ஜெபிப்போம்.

**அக்டோபர் 4, சனி**
**நாள் 13**

"நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார். அப்பொழுது மோசே தேவனை நோக்கி: பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும், நான் எம்மாத்திரம் என்றான். அதற்கு அவர்: நான் உன்னோடே இருப்பேன்; நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவந்தபின், நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார்" **யாத்திராகமம் *3:10-12.***

**ஜெபக் குறிப்புகள்:**

- அறுவடையின் ஆண்டவரே, உமது அழைப்பை நாங்கள் கேட்டு நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளிஸ் ஆஃப் காட் சபையாகிய நாங்கள் அதன் செல்லுஞ்செலவைக் கணக்கு பார்த்து அந்த அழைப்பினை மனதார ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் அப்போஸ்தலர்களாகச் செல்வோம். நாங்கள் தீர்க்கதரிசிகளாகச் செல்வோம். நாங்கள் சுவிசேஷகர்களாகச் செல்வோம். நாங்கள் மேய்ப்பர்களாக செல்வோம், நாங்கள் போதகர்களாக செல்வோம்.

- கர்த்தராகிய இயேசுவே, நீர் அனுப்பப்பட்டது போல, நாங்கள் ஒருவரையொருவர் அனுப்புகிறோம். மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்காக எங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் உம்மை பகுத்து தந்தீரே, அந்த பங்கை நன்றியோடு பெற்றுகொள்கிறோம்.

- ஆண்டவராகிய இயேசுவே, ஒருவரையொருவர் அசட்டை பண்ணினதற்காக எங்களை மன்னியும். ஒருவரையொருவர் அவமதித்ததிற்காக எங்களை மன்னியும், நீர் கொடுத்த வரங்களைத் தவறாகப் பயன்படுத்தியதற்காக எங்களை மன்னியும். நீர் பார்க்கிறது போல நாங்களும் பார்க்க எங்களுக்குப் புதிய கண்களையும், நீர் கேட்பது போல நாங்களும் கேட்க எங்களுக்கு புதிய காதுகளையும் தாரும்.

- நாங்கள் எங்கள் இடது புறமும் வலது புறமும் நோக்கி அப்போஸ்தலர்களை, தீர்க்கதரிசிகளை, சுவிசேஷகர்களை, மேய்ப்பர்களை மற்றும் போதகர்களை விசுவாச கண்களால் பார்த்து அவர்கள் எழும்புவார்களாக, தேசத்திற்கு அனுப்பப்படுவார்களாக என்று அறிக்கை செய்கிறோம். நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளிஸ் ஆஃப் காட் இயக்கத்திற்கு ஒரு புதிய சகாப்தத்தை கட்டளை இருக்கிறோம். இந்த ஐந்து வரங்களின் ஒருங்கியக்கம் அறுவடையில் கிரியை செயல்படுவதை, நிலைநிற்கிற ஒரு எழுப்புதல் உண்டாவதை, வருகிற பல தசாப்தங்கள் தொடருகிற சீடர்களை உருவாக்கும் பணி செய்யப்படுவதை எங்கள் விசுவாச கண்களால் காண்கிறோம்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: கிழக்கு கடற்கரை வடத் தீவின் மீது தேவ ஆசீர்வாதத்தையும் பரிசுத்த ஆவியின் ஊற்றுதலையும் கட்டளையிட்டு ஜெபிக்கிறோம். பாஸ்டர் சாஜன் ஈசோவையும் அந்தப் பகுதியில் உள்ள எல்லா போதகர்களையும் தேவன் பாதுகாத்து அவர்கள் மீது இருக்கிற அபிஷேகம் இன்னும் பல மடங்கு பெறுக அவர்களுக்காக மன்றாடி ஜெபியுங்கள். நமது இயக்கம் ஏராளமான குழந்தைகளுக்கு பாதுகாப்பான வீடாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று ஜெபியுங்கள். நமது சபைகள் மூலம் குழந்தைகளின் நல்லொழுக்கம் என்ன என்பதை நம் தேசமும் தேசமக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்று அறிக்கை இடுங்கள். பாஸ்டர் சாரா கூபேவின் தலைமைக்காகவும், தேசிய அலுவலகத்தில் நமது நிதி மற்றும் வரிகளை நிர்வகிக்கும் பணியில் அவர்கள் செய்கிற எல்லா சேவைக்குமாக ஜெபியுங்கள்.






**அக்டோபர் 5, ஞாயிறு**
**நாள் 14**

"அப்பொழுது மோசே தேவனை நோக்கி*:* நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும்போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான்*.* அதற்குத் தேவன்*:* இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்*"* **யாத்திராகமம் *3:13-14.***

**ஜெபக் குறிப்புகள்:**

- பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, 1 பேதுரு 2 ஆம் அதிகாரத்தில் இருக்கிற வசனங்களில் உள்ள வார்த்தைகளை விசுவாச அறிக்கைகளாக (கீழே கொடுக்கப்பட்ட முறையில்) தனிநபர்கள், நகரங்கள், சபைகள் மற்றும் தேசங்கள் மீது அறிக்கையிடுங்கள். கீழே காண்கிற அடைப்புக்குறிக்குள் நபர்கள், பட்டிணம், நகரம், உங்கள் சபைகள் மற்றும் தேசங்கள் நீங்கள் வழிநடத்தப்படும்போது, உங்கள் மக்கள், தேசங்கள் என்பவைகளின் பெயர்கள் உட்செருகி விசுவாச அறிக்கையிடவும்.
- நீங்கள் [ _________ ] தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி. நீங்கள் [ ____________ ] ராஜரீக ஆசாரியர்கள், ஒரு பரிசுத்த ஜாதி/தேசம், தேவனுக்கு சொந்தமான ஜனம். அதனால், நீங்கள் [ ___________ ] தேவனுடைய நன்மையை மற்றவர்களுக்குக் வெளிப்படுத்த முடியும், ஏனென்றால் அவர் உங்களை [ _____________ ] அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்தில் வரவழைத்து, தம்முடைய வல்லமையுள்ள நாமத்தில் பலத்தச் செயல்களைச் செய்ய உங்களை அனுப்பியிருக்கிறார்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: பிளெண்டி விரிகுடாவின் (Bay of Plenty) மீது ஆசீர்வாதத்தையும் பரிசுத்த ஆவியின் ஊற்றுதலையும் கட்டளையிட்டு அறிக்கை செய்யுங்கள். அந்தப் பகுதியில் உள்ள பி.எஸ். டென்னிஸ் மற்றும் மினா அக்ரமன் மற்றும் அங்குள்ள மற்று போதகர்கள் பாதுகாக்கப்படவும் அவர்களுக்குள் இருக்கும் அபிஷேகம் பெருகவும் அவர்களுக்காக மன்றாடி ஜெபியுங்கள். நமது நிர்வாக உறுப்பினர் பி.எஸ். ஜோசப் மற்றும் லிசா மெக்காலே ஆகியோருக்கு ஆசீர்வாதம், தைரியம், ஞானம் உண்டாகவும் அவர்களுடைய எல்லா தேவைகளும் சந்திக்கப்படவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

- எருசலேமின் சமாதானத்துக்காகவும், இஸ்ரேலின் எழுப்புதல்காகவும் ஜெபியுங்கள். அவர்கள் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவும், யூதர்களோடு ஆண்டவர் செய்த உடன்படிக்கையின் வாக்குத்ததங்கள் நிறைவேறப்படவும் ஜெபியுங்கள்.

## அக்டோபர் 6, திங்கள்
## நாள் 15

*"அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார். அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே இரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான். அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடேகூட இருப்பேன்; ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார்"* **நியாயாதிபதிகள் *6:14-16.***

**ஜெபக் குறிப்புகள்:**

- தேவனே, எங்கள் இயக்கத்திலுள்ள எல்லோரும் உறுதியான நம்பிக்கை உள்ளவர்களாக இருக்க எங்களுக்கு உம் கிருபையை தாரும்.

- 'பலங்கொண்டு திடமனம் உள்ளவர்களாக', பயப்படாமலும், சோர்வடையாமலும் இருக்க நாங்கள் எங்களை அர்ப்பணிக்கின்றோம். 'எங்கள் தேவனாகிய கர்த்தர் நாங்கள் செல்லும் எல்லா இடங்களிலும் எங்களுடன் இருக்கிறார்' என்பதைக் காண எங்களுக்குக் கண்களைத் தாரும் (யோசுவா 1:9, மத்தேயு 28).


- 'எங்களுக்கு விரோதமாக இருப்பவர்களைப் பார்க்கிலும் எங்களோடு இருக்கிறவர் பெரியவர்' என்ற உணர்வை உடையவர்களாக நாங்கள் எப்பொழுதும் காணப்பட எங்களுக்கு கிருபை பாராட்டும் (2 இராஜாக்கள் 6:16).

- எங்கள் சொந்த அறிவு மற்றும் புத்திக்கு எங்களை நாங்கள் மட்டுப்படுத்தியதற்காக பிதாவே எங்களை மன்னியும். எங்கள் முந்தினக் கால அனுபவங்களின் அடிப்படையில் எங்கள் எதிர்காலத்தையும், எதிர்பார்ப்புகளையும் எங்களால் என்ன சாதிக்கமுடியும் என்பதையும் மட்டுப்படுத்தியதற்காக எங்களை மன்னியும். நாங்கள் மனந்திரும்புகிறோம், உண்மை குறித்தும் எங்களுக்குள் இருக்கும் உம் வல்லமையைக் குறித்தும் இன்னும் ஆழமான வெளிப்பாடுகளை நாங்கள் உம்மிடத்திலிருந்து கேட்டுக்கொள்கிறோம்.

- எங்கள் இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் கர்த்தருடைய ஊழியத்திற்காக வைராக்கியமான விசுவாசம் உள்ளவர்களாக எழும்புகிற ஒரு புதிய சகாப்தம் உண்டாவதாக என்று விசுவாசத்தோடு இயேசுவின் நாமத்தில் அறிக்கை செய்கிறோம். கர்த்தருடைய புதிய திட்டங்களுக்கும், பரிசுத்த ஆவியின் தூண்டுதல்களுக்கும் சிறிதளவு தாமதம் இல்லாமல் உடனடிக் கீழ்படிகிற, அவருடைய வல்லமை எங்களுக்குள் பாய்ந்துச் செல்ல எங்களை விட்டுக்கொடுக்கிற ஒரு சகாப்தமாக அது மாறட்டும்.

- நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளிஸ் ஆஃப் காட் இயக்கத்தின் பெலனும் துருகமும் தேவன் ஒருவர் மட்டும் தான் என்று நாங்கள் கூறுகிறோம். அறுவடையின் தேவன் தாமே எங்கள் மீது தம் கண்களைப் பதியவைத்து இரவும் பகலும் எங்களை கண்காணித்து 2033 க்கு முன்பு எங்கள் செல்வாக்கையும் செயல்பாட்டுத் தடத்தையும் இப்பொழுது இருக்கிறதை விட பல்லாயிரம் மடங்கு பெருகச் செய்வார்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: வைகாடோ மீது கர்த்தருடைய ஆசீர்வாதமும் பரிசுத்த ஆவியின் ஊற்றுதலும் உண்டாகட்டும் என்று விசுவாசத்தோடு அறிக்கை செய்யுங்கள். அந்தப் பகுதியில் உள்ள பாஸ்டர் கரோலியன் மோக்ஸாம் மற்றும் கர்த்தருடைய ஊழியத்தை செய்கிற எல்லா போதகர்களுடைய பாதுகாப்புக்காகவும், அவர்களுக்குள் இருக்கிற அபிஷேகம் பல மடங்கு பெருகவும் அவர்களுக்காக மன்றாடி ஜெபியுங்கள். நமது நிர்வாக உறுப்பினர் பாஸ்டர் பால் மற்றும் கெர்ரி கார்டனுக்கு ஆசீர்வாதம், தைரியம், ஞானம் உண்டாகும் அவர்களுடைய எல்லா தேவைகளும் சந்திக்கப்படவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.






**அக்டோபர் 7, செவ்வாய்**
**நாள் 16**

"இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். உன் சுயஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி, அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்" **அப்போஸ்தலர் 26:16-18.**

**ஜெபக் குறிப்புகள்:**

- எங்கள் ஆண்டவராகிய இயேசுவே, நீர் எங்களுக்காகச் செய்ததை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், எங்கள் உதடுகளை ஒரு நெருப்பத் தழலால் தொட்டு, எங்களை உமது ' அனுப்பப்பட்ட மக்களாக ' மாற்றினீர். எங்கள் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், நாங்கள் உமது நாமம் தரிக்கப்பட்ட உமது ஜனம்.

- நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளிஸ் ஆஃப் காட் சபைகளாகிய நாங்கள் எங்களைத் தாழ்த்தி ஜெபிக்கிறோம்.

- நாங்கள் எங்களைத் தாழ்த்தி, உமது முகத்தைத் தேடுகிறோம். எங்கள் பொல்லாத வழிகளிலிருந்தும், பூமிக்குரிய காரியங்களில் இருந்து, ஆவிக்குரிய காரியம் அல்லாதவைகளிலிருந்து, பிசாசுக்குரிய எல்லாவற்றிலிருந்தும் விட்டுவிலகி நாங்கள் தேவனுக்கு நேராக எங்கள் வாழ்க்கையை திரும்புகிறோம்.

- அனுப்பப்பட்டவர்களுக்காக உம்மை நோக்கி நாங்கள் கூப்பிடும்போது உமது மிகுந்த கிருபையினால் பரலோகத்திலிருந்து எங்கள் கூக்குரலை கேட்டருளும். எங்கள் பாவங்களை மன்னித்து எங்கள் தேசத்தை இரட்சியும். உமது கண்களையும் காதுகளையும் திறந்து, நாங்கள் ஜெபிக்கிற ஒவ்வொரு ஜெபத்தையும் கவனியும்.

- எங்கள் இயக்கத்தின் தலைவர்களுக்கும் எங்கள் தேசத்தின் தலைவர்களுக்கும் பரத்திலிருந்து வருகிற ஞானத்தின் ஆவியினால் நிரப்பப்படுவார்களாக என்று விசுவாசத்தோடு அறிக்கை செய்கிறோம். பரிசுத்த ஆவியானவர் கொடுக்கிற ஞானம் தூய்மையானதும், சமாதானத்தை விரும்புகிறதும், எல்லா சூழ்நிலைகளிலும் மென்மையானதும், மற்றவர்களுக்குக் கீழ்படிய தயாருள்ளதாக இருக்கும். அது தயவும் நற் கிரியைகள் என்ற பலன்கள் நிறைந்ததும் நேர்மையுள்ளதும் பாரபட்சம் காட்டாத ஞானமாக இருக்கும் (யாக்கோபு 3).

- எங்கள் இயக்கம் முழுவதும், அயோடெரோவா நியூசிலாந்து முழுவதும் சமாதானம் பண்ணுகிறவர்கள் எழும்பக்கடவார்கள் என்று அறிக்கை செய்கிறோம். சமாதானத்தின் விதைகளை விதைத்து, நீதியின் அறுவடையை அறுவடை செய்யும் சமாதானம் பண்ணுகிறவர்கள் எழும்புவார்களாக.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: ஆக்லாந்து பகுதிகளின் மீது தேவ ஆசீர்வாதமும் பரிசுத்த ஆவியின் ஊற்றுதலும் உண்டாவதாக என்று விசுவாசத்தோடு இயேசுவின் நாமத்தில் அறிக்கை செய்யுங்கள். பாஸ்டர் பினுராஜ் மற்றும் கிறிஸ் சோலா மற்றும் அந்தப் பகுதிகளில் உள்ள மற்ற அனைத்து போதகர்களின் பாதுகாப்புக்காகவும், அவர்களுக்குள் இருக்கிற அபிஷேகம் பல மடங்கு பெருகவும் அவர்களுக்காக மன்றாடி ஜெபியுங்கள்.

- நமது நிர்வாகக் குழு உறுப்பினரும் டோங்கன் இனக்குழுவின் தலைவருமான பாஸ்டர் அனாஹினா மற்றும் வோசைலாங்கி சிகாலு ஆகியோருக்கு ஆசீர்வாதம், தைரியம், ஞானம் உண்டாகவும் அவர்களுடைய எல்லா தேவைகளும் சந்திக்கப்படவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். அனைத்து டோங்கன் சபைகளின் மீதும் இரட்டிப்பான ஆசீர்வாதத்தை கட்டளை இடுங்கள். நமது இந்திய இனத் தலைவர் பாஸ்டர் பினுராஜுக்கு ஆசீர்வாதம், தைரியம், ஞானம் உண்டாகவும் அவருடைய எல்லா தேவைகளும் சந்திக்கப்படவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். அனைத்து இந்திய சபைகள் மீதும் இரட்டிப்பான ஆசீர்வாதத்தை கட்டளை இடுங்கள். இந்திய சபைகளை நிறுவுதல் செய்கிறவர்கள் எழும்ப கட்டளை இடுங்கள்.

## அக்டோபர் 8, புதன்
## நாள் 17

*"தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: அனனியாவே, என்றார். அவன்: ஆண்டவரே, இதோ, அடியேன் என்றான். அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப்போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான். அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான் என்றார்"* ***அப்போஸ்தலர் 9:10-12.***

**ஜெபக் குறிப்புகள்:**

- பிதாவே, உலகளாவிய அசெம்பிளிஸ் ஆஃப் காட் இயக்கத்திற்கு நீர் வியத்தகுவிதமாக உண்மையுள்ளவராய் இருக்கிறீரே அதற்கு நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

- 2033 ஆம் ஆண்டுக்குள் நாங்கள் இருமடங்காக பெருகுவோம் என்ற நம்பிக்கையோடு எங்களை காட்சிப்படுத்தி ஒருங்கிணைந்து செயல்பட எங்கள் மீது கிரியை செய்கிற உம்முடைய கிருபைக்காகவும் எங்களுக்குள் கிரியை செய்கிற ஒற்றுமைக்காகவும் உமக்கு ஸ்தோத்திரம். எங்கள் செயல்தடத்தை இரட்டிப்பாக்குகிற நீடித்த விசுவாசம் எங்களுக்கு உண்டாக நாங்கள் உம்மை எதிர்நோக்குகிறோம்.

- இங்கே அயோடெரோவா நியூசிலாந்தில் உமக்கு "ஆம்" என்று சொல்கிறோம், " நான் எழுந்து போகிறேன்" என்று உரத்த சத்தமாய்க் கதறி சொல்கிறோம். பிதாவே, உம் அழைப்பைக் கேட்க எனக்கு காதுகளை தாரும், உம்முடைய அழைப்பு என் தயக்கங்களை விட மிகப் பெரியது என்பதை அறிந்து கொள்ள உதவி செய்யும்.

- எங்கள் கர்த்தாவே, நாங்கள் நினைத்ததை விட அதிகமாக, எங்கள் மூலமாகவும், எங்களுக்குள்ளும் நீர் அசைவாடுவீர் என்று நாங்கள் நம்புகிறோம். உமது தவறாத குரலை நாங்கள் கேட்டோம், எங்கள் மத்தியில் உமது வல்லமை எங்கள் மத்தியில் பலமாய் நிரூபிக்கப்பட நாங்கள் மிகுந்த வாஞ்சையோடு ஏங்குகிறோம். கர்த்தாவே, நாங்கள் உயிர்பெற்று எழும்ப செய்யும், பலத்தினாலுமல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல உம்முடைய ஆவியினால் எல்லாம் ஆகும்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி. நார்த்லேண்ட் மீது மீது ஆசீர்வாதத்தையும் பரிசுத்த ஆவியின் ஊற்றுதலையும் கட்டளையிட்டு அறிக்கை செய்யுங்கள். பாஸ்டர் ஷான் ஃபாஸ்டர் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள மற்று போதகர்களும் பாதுகாக்கப்படவும் அவர்களுக்குள் இருக்கும் அபிஷேகம் பெருகவும் அவர்களுக்காக மன்றாடி ஜெபியுங்கள். நமது பிஜிய இனத் தலைவர் பாஸ்டர் சோலோ மற்றும் வாட்டி ஸ்டார்க்கிற்கு ஆசீர்வாதம், தைரியம், ஞானம் உண்டாகவும் அவர்களுடைய எல்லா தேவைகளும் சந்திக்கப்படவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். நமது அனைத்து பிஜிய சபைகள் மீது தேவ ஆசீர்வாதம் உண்டாகவும், பிஜிய சபைகள் நிறுவுதல் செய்கிற ஊழியர்கள் வல்லமையோடு எழும்பவும் இரட்டிப்பான பங்கு ஆசீர்வாதத்தை கட்டளை இடுங்கள். நமக்கு பிரியமான அல்பாகுரூசிஸ் கல்லூரியை ஜெபத்தில் ஏந்திக்கொள்ளுங்கள், கல்லூரிக்கு தேவையான எல்லா ஆசீர்வாதங்களும் நன்மைகளும் உண்டாக ஜெபியுங்கள். அனைத்து தலைமுறைகளிலிருந்தும் மாணவர்களை அல்பாகுரூசிஸில் வேதாகமத்தை கற்றுக்கொள்ளவும் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரப்பப்படவும் ஜெபியுங்கள். தேசிய இயக்குநர் பாஸ்டர் லீனா குகுடை மற்றும் அனைத்து அல்பாகுரூசிஸ் கல்லூரி ஊழியர்களுக்கும் தேவ அன்பைப்பற்றி அதிகரித்து வருகிற ஞானம், பெருகிவருகிற வல்லமை, ஆழமடைகிற அறிவு உண்டாக ஜெபியுங்கள்.






**அக்டோபர் 9, வியாழன்**
**நாள் 18**

"இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்" **யோவான் *20:21-23*.**

**ஜெபக் குறிப்புகள்:**

- பிதாவே, MM33 என்ற தரிசனதிட்டத்தின் மீது நீர் ஊற்றின உமது ஜீவனையும் ஆவியையும் இடைவிடாமல் பெற்றுக்கொள்ள எங்கள் இதயங்களை திறந்து வைக்கிறோம். ஒவ்வொரு கண்டத்திலிருந்தும் வந்த அசெம்பிளிஸ் ஆஃப் காட் தலைவர்கள் இணைந்து அந்த தரிசனத்திற்கு "ஆம்" என்று சொன்னப்பொழுது அவர்களுக்குள் கிரியை செய்த ஒற்றுமைக்கும் உடன்பாட்டிற்கும் நன்றி. இது போன்ற ஒரு மகிமையான நேரத்திற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

- உலகத்தைத் தலைகீழாக மாற்ற பட்டினங்கள்/நகரங்கள்/கிராமங்கள் மற்றும் தேசங்களில் ஒரு உலகளாவிய இயக்கமாக எங்களை திட்டமிட்டு நிலைநிறுத்தின இந்த மகிமையான நேரத்திற்க்காக ஸ்தோத்திரம்.

- எங்கள் சபைகள் மூலமாக உமது அன்பு ஒவ்வொரு சுற்றுப்புறத்திலும் மென்மேலும் பெருக வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் ஆவிக்குரிய அறிவிலும் புரிதலிலும் தொடர்ந்து வளர எங்களுக்கு உதவி செய்யும். மனத்தாழ்மையுடன் நாங்கள் எங்களை இடைவிடாமல் அர்ப்பணிக்கும் போது உமக்கு முக்கியமானது என்ன என்பதை அறிந்து கொள்ள எங்களுக்கு கற்று தாரும். நாங்கள் உண்மையுள்ளவர்களாகவும், தூய்மையுள்ளவர்களாகவும், குற்றமற்றவர்களாகவும் கிறிஸ்துவின் வருகையின் நாள் வரை வாழ உதவி செய்யும்.

- பரிசுத்த ஆவியே, அறுவடையின் ஆவியே, வல்லமையின் ஆவியே, நாங்கள் அனுப்பப்படும் எல்லா இடங்களிலும் உமது பிரசன்னத்தை தருவேன் என்று உறுதி அளித்ததிற்காக உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவைத் தைரியமாக அறிவிக்கவும், தேவனுடைய ராஜ்யத்தை நிரூபிக்கும் அற்புத அடையாளங்களைச் செய்யவும் எங்களுக்குப் புதுப்பிக்கப்பட்ட துணிவைத் தாரும்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: நமது இயக்கத்திலுள்ள அனைத்து இளையோர் இளைஞர்களையும் ஆண்டவருடைய சமூகத்தில் உயர்த்தி ஜெபியுங்கள். கோலியாத்துகளை கண்டு பயப்படாத ஒரு தலைமுறையின் எழுச்சி அயோடெரோவா மீது உண்டாக இயேசுவின் நாமத்தில் அறிக்கை செய்யுங்கள். பரிசுத்த ஆவியின் வல்லமையிலும், இயேசுவின் மீதுள்ள அன்பிலும் நிறைந்த, ஒன்றுக்கும் முன்னால் பின்வாங்காத இளைஞர்களின் படை அவர்கள் எழும்புவார்களாக. பாஸ்டர் ஜேமி மற்றும் ரெபேக்கா சாப்மேனை ஜெபத்தில் எந்திக்கொள்ளுங்கள். அவர்கள் தலைமை தாங்கும் 'ஃபியர்ல்ஸ் ஜெனரேஷன்' என்ற இயக்கத்தின் மீது பரமண்டலங்களின் ஆசீர்வாதமும் நன்மைகளும் உண்டாக மனதார ஜெபிப்போம். குக் தீவு இனத் தலைவரும் நிகழ்ச்சி மேலாளருமான பாஸ்டர் அனி மற்றும் ரியா டாங்கிமடைட்டி மீது தேவ ஆசீர்வாதமும், தைரியமும், ஞானமும் உண்டாகவும் அவர்களுடைய எல்லா தேவைகளும் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள். குக் தீவில் உள்ள எல்லா சபைகள் மீதும் இரட்டிப்பான ஆசீர்வாதம் உண்டாகும், அங்கே சபைகளை நிறுவுதல் செய்யும் ஊழியர்கள் வல்லமையோடு எழும்பவும் ஜெபியுங்கள்.

## அக்டோபர் 10, வெள்ளி
## நாள் 19


"இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். புறப்பட்டுப்போங்கள்; ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டுபோகவேண்டாம்; வழியிலே ஒருவரையும் வினவவும் வேண்டாம். ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும். அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக் குடியுங்கள்; வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். வீட்டுக்கு வீடு போகாதிருங்கள். ஒரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொண்டால் அவர்கள் உங்கள்முன்வைக்கிறவைகளை நீங்கள் புசித்து, அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்" **லூக்கா *10:1-9.***

**ஜெபக் குறிப்புகள்:**

- ஆண்டவராகிய இயேசுவே, நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளி ஆஃப் காட் இயக்கம் எங்களை எந்த வயலுகள்க்கு அனுப்பினீரோ அந்த வயல்களுக்கு மட்டுமே அறுவடை செய்ய வேண்டும் என்று ஜெபிக்கிறோம். நீர் எங்கள் சபைகளிலெல்லாம் புதிய ஒரு மிஷன் காற்றை கட்டவிழ்த்து விட வேண்டும் என்று ஜெபிக்கிறோம். நாங்கள் ஒருவரையொருவர் அழைக்கப்பட்ட, நியமிக்கப்பட்ட மற்றும் அனுப்பப்பட்ட ஊழியர்களாக அடையாளம் கண்டுகொள்ள உதவி செய்யும்.

- எங்கள் கர்த்தாவே, ஒவ்வொரு நற்கிரியையிலும் கனிகொடுக்கவும், உம்மைப்பற்றிய அறிவில் ஒன்றாக வளரவும் நாங்கள் ஏங்குகிறோம். உமது மகிமையான ஐசுவரியத்தின்படி எங்களை எல்லா வல்லமையினாலும் பலப்படுத்தும்படி நாங்கள் உம்மை நோக்கி ஜெபிக்கிறோம். அதனால் நாங்கள் மிகுந்த சகிப்புத்தன்மையையும் பொறுமையையும் பெற்று மகிழ்ச்சியுடன் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களை ஒளியின் ராஜ்யத்தில் உள்ள பரிசுத்தவான்களோடு இணைந்து சுதந்திரத்தில் பங்குபெறும் அறுவடையின் வேலையாட்களாக தகுதிப்படுத்தியதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் (கொலோ. 1).

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: பணியிடங்களில் சேப்ளின்களின் எண்ணிக்கையை ஆதரிக்கும் நமது சேப்ளின்சி இயக்குனர் பீட்டர் டேட்டை ஆண்டவருடைய சமூகத்தில் உயர்த்தி அவருக்காக ஜெபியுங்கள். பணியிடங்களில் இறைப்பணி செய்ய நமது இயக்கத்திலுள்ள அனைவருடைய உள்ளங்களை உணர்த்தும்படி அறுவடையின் ஆண்டவரிடம் மன்றாடி ஜெபியுங்கள். உணவு அறைகள் மற்றும் பணியாளர் அறைகளில் இயேசுவின் நாமம் கிருபையுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்று ஜெபியுங்கள். நமது கொரிய இனத் தலைவர் பாஸ்டர் ஹோ மின் கிம் மீது ஆசீர்வாதத்தையும் பரிசுத்த ஆவியின் ஊற்றுதலையும் கட்டளையிட்டு அறிக்கை செய்யுங்கள். நமது அனைத்து கொரிய சபைகள் மீதும் இரட்டைப் பங்கு ஆசீர்வாதத்தையும், கொரிய இனமக்கள் மத்தியில் சபைகள் நிறுவுதல் செய்கிற ஊழியர்கள் வல்லமையோடு எழும்ப ஜெபியுங்கள்.






**அக்டோபர் 9, வியாழன்**
**நாள் 18**

*"இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்"* **யோவான் *20:21-23*.**

**ஜெபக் குறிப்புகள்:**

- பிதாவே, MM33 என்ற தரிசனதிட்டத்தின் மீது நீர் ஊற்றின உமது ஜீவனையும் ஆவியையும் இடைவிடாமல் பெற்றுக்கொள்ள எங்கள் இதயங்களை திறந்து வைக்கிறோம். ஒவ்வொரு கண்டத்திலிருந்தும் வந்த அசெம்பிளிஸ் ஆஃப் காட் தலைவர்கள் இணைந்து அந்த தரிசனத்திற்கு "ஆம்" என்று சொன்னப்பொழுது அவர்களுக்குள் கிரியை செய்த ஒற்றுமைக்கும் உடன்பாட்டிற்கும் நன்றி. இது போன்ற ஒரு மகிமையான நேரத்திற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

- உலகத்தைத் தலைகீழாக மாற்ற பட்டினங்கள்/நகரங்கள்/கிராமங்கள் மற்றும் தேசங்களில் ஒரு உலகளாவிய இயக்கமாக எங்களை திட்டமிட்டு நிலைநிறுத்தின இந்த மகிமையான நேரத்திற்க்காக ஸ்தோத்திரம்.

- எங்கள் சபைகள் மூலமாக உமது அன்பு ஒவ்வொரு சுற்றுப்புறத்திலும் மென்மேலும் பெருக வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் ஆவிக்குரிய அறிவிலும் புரிதலிலும் தொடர்ந்து வளர எங்களுக்கு உதவி செய்யும். மனத்தாழ்மையுடன் நாங்கள் எங்களை இடைவிடாமல் அர்ப்பணிக்கும் போது உமக்கு முக்கியமானது என்ன என்பதை அறிந்து கொள்ள எங்களுக்கு கற்று தாரும். நாங்கள் உண்மையுள்ளவர்களாகவும், தூய்மையுள்ளவர்களாகவும், குற்றமற்றவர்களாகவும் கிறிஸ்துவின் வருகையின் நாள் வரை வாழ உதவி செய்யும்.

- பரிசுத்த ஆவியே, அறுவடையின் ஆவியே, வல்லமையின் ஆவியே, நாங்கள் அனுப்பப்படும் எல்லா இடங்களிலும் உமது பிரசன்னத்தை தருவேன் என்று உறுதி அளித்ததிற்காக உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவைத் தைரியமாக அறிவிக்கவும், தேவனுடைய ராஜ்யத்தை நிரூபிக்கும் அற்புத அடையாளங்களைச் செய்யவும் எங்களுக்குப் புதுப்பிக்கப்பட்ட துணிவைத் தாரும்.

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: நமது இயக்கத்திலுள்ள அனைத்து இளையோர் இளைஞர்களையும் ஆண்டவருடைய சமூகத்தில் உயர்த்தி ஜெபியுங்கள். கோலியாத்துகளை கண்டு பயப்படாத ஒரு தலைமுறையின் எழுச்சி அயோடெரோவா மீது உண்டாக இயேசுவின் நாமத்தில் அறிக்கை செய்யுங்கள். பரிசுத்த ஆவியின் வல்லமையிலும், இயேசுவின் மீதுள்ள அன்பிலும் நிறைந்த, ஒன்றுக்கும் முன்னால் பின்வாங்காத இளைஞர்களின் படை அவர்கள் எழும்புவார்களாக. பாஸ்டர் ஜேமி மற்றும் ரெபேக்கா சாப்மேனை ஜெபத்தில் எந்திக்கொள்ளுங்கள். அவர்கள் தலைமை தாங்கும் 'ஃபியர்ல்ஸ் ஜெனரேஷன்' என்ற இயக்கத்தின் மீது பரமண்டலங்களின் ஆசீர்வாதமும் நன்மைகளும் உண்டாக மனதார ஜெபிப்போம். குக் தீவு இனத் தலைவரும் நிகழ்சி மேலாளருமான பாஸ்டர் அனி மற்றும் ரியா டாங்கிமடைட்டி மீது தேவ ஆசீர்வாதமும், தைரியமும், ஞானமும் உண்டாகவும் அவர்களுடைய எல்லா தேவைகளும் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள். குக் தீவில் உள்ள எல்லா சபைகள் மீதும் இரட்டிப்பான ஆசீர்வாதம் உண்டாகும், அங்கே சபைகளை நிறுவுதல் செய்யும் ஊழியர்கள் வல்லமையோடு எழும்பவும் ஜெபியுங்கள்.

## அக்டோபர் 10, வெள்ளி
## நாள் 19

"இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். புறப்பட்டுப்போங்கள்; ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டுபோகவேண்டாம்; வழியிலே ஒருவரையும் வினவவும் வேண்டாம். ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும். அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக் குடியுங்கள்; வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். வீட்டுக்கு வீடு போகாதிருங்கள். ஒரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொண்டால் அவர்கள் உங்கள்முன்வைக்கிறவைகளை நீங்கள் புசித்து, அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்" **லூக்கா *10:1-9.***

**ஜெபக் குறிப்புகள்:**

- ஆண்டவராகிய இயேசுவே, நியூசிலாந்தில் உள்ள அசெம்பிளி ஆஃப் காட் இயக்கம் எங்களை எந்த வயலுகள்க்கு அனுப்பினீரோ அந்த வயல்களுக்கு மட்டுமே அறுவடை செய்ய வேண்டும் என்று ஜெபிக்கிறோம். நீர் எங்கள் சபைகளிலெல்லாம் புதிய ஒரு மிஷன் காற்றை கட்டவிழ்த்து விட வேண்டும் என்று ஜெபிக்கிறோம். நாங்கள் ஒருவரையொருவர் அழைக்கப்பட்ட, நியமிக்கப்பட்ட மற்றும் அனுப்பப்பட்ட ஊழியர்களாக அடையாளம் கண்டுகொள்ள உதவி செய்யும்.

- எங்கள் கர்த்தாவே, ஒவ்வொரு நற்கிரியையிலும் கனிகொடுக்கவும், உம்மைப்பற்றிய அறிவில் ஒன்றாக வளரவும் நாங்கள் ஏங்குகிறோம். உமது மகிமையான ஐசுவரியத்தின்படி எங்களை எல்லா வல்லமையினாலும் பலப்படுத்தும்படி நாங்கள் உம்மை நோக்கி ஜெபிக்கிறோம். அதனால் நாங்கள் மிகுந்த சகிப்புத்தன்மையையும் பொறுமையையும் பெற்று மகிழ்ச்சியுடன் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களை ஒளியின் ராஜ்யத்தில் உள்ள பரிசுத்தவான்களோடு இணைந்து சுதந்திரத்தில் பங்குபெறும் அறுவடையின் வேலையாட்களாக தகுதிப்படுத்தியதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் (கொலோ. 1).

- உள்ளூர்/தேசிய/உலகளாவிய பணி: பணியிடங்களில் சேப்ளின்களின் எண்ணிக்கையை ஆதரிக்கும் நமது சேப்ளின்சி இயக்குனர் பீட்டர் டேட்டை ஆண்டவருடைய சமூகத்தில் உயர்த்தி அவருக்காக ஜெபியுங்கள். பணியிடங்களில் இறைப்பணி செய்ய நமது இயக்கத்திலுள்ள அனைவருடைய உள்ளங்களை உணர்த்தும்படி அறுவடையின் ஆண்டவரிடம் மன்றாடி ஜெபியுங்கள். உணவு அறைகள் மற்றும் பணியாளர் அறைகளில் இயேசுவின் நாமம் கிருபையுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்று ஜெபியுங்கள். நமது கொரிய இனத் தலைவர் பாஸ்டர் ஹோ மின் கிம் மீது ஆசீர்வாதத்தையும் பரிசுத்த ஆவியின் ஊற்றுதலையும் கட்டளையிட்டு அறிக்கை செய்யுங்கள். நமது அனைத்து கொரிய சபைகள் மீதும் இரட்டைப் பங்கு ஆசீர்வாதத்தையும், கொரிய இனமக்கள் மத்தியில் சபைகள் நிறுவுதல் செய்கிற ஊழியர்கள் வல்லமையோடு எழும்ப ஜெபியுங்கள்.





*If my people, who are called by my name, will humble themselves and pray and seek my face and turn from their wicked ways, then I will hear from heaven, and I will forgive their sin and will heal their land.* 2 Chronicles 7:14

## Feedback

Thank you for praying for 21 Days.
The AGNZ Prayer Team would love to hear from you. Use the email address below to let us know your insights, thoughts and suggestions. Email us at agnznationalprayer@gmail.com

## Support

Our goal is to raise up an eco-system of prayer throughout the AGNZ movement and beyond. If you would like to help, we'd be grateful for your prayers and your financial support. Account details: name, 'AGNZ Prayer'. Number, 03-0196-0120003-001

## Website

Website:- To learn more, find resources and
get translations of this Guide in other languages, go to
www.agnz.org/prayer-initiative